# *வட கொரியாவுடன்*
# *சமாதான உடன்படிக்கை*

1958-ஆம் ஆண்டிலிருந்து கொரியா நாடானது வட கொரியா, தென் கொரியா என்று இரண்டாகப் பிரிக்கப் பட்டது. நூற்றுக் கணக்கான குடும்பங்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாத நிலை உண்டாகியது. வட கொரியாவில் எழுபத்தாறு வீதம் மக்கள் (76%) சீன பாரம்பரியத்தைச் சார்ந்தவர்கள். எனவே சீனாவுடன் ஒன்றிணைந்து கம்யூனிச நாடாக மாறியது இவ் வட நாடு.

இதற்கு எதிராகத் தென் கொரியாவை கம்யூனிச ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் அமெரிக்கா களத்தில் இறங்கியது. 30,000 அமெரிக்க இராணுவ வீரர்கள் என்றும் தென் கொரியாவில் நிறுத்தப் பட்டனர். அமெரிக்க இராணுவம் தென் கொரியாவின் இராணுவத்துடன் இணைந்து ஆண்டு தோறும் யுத்தப் பயிற்சிகளை மேற் கொண்டது.

யுத்தத்திற்குத் தயாரான நிலையில் தாங்களும் இருப்பதே சரியான சூழ்ச்சி என்று கருதிய வட கொரியா அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் நகரங்களைத் தாக்கக் கூடிய அளவிலான ஏவு கணைகளையும் அணு குண்டுகளையும் தயாரித்தது. மூன்றாம் உலகப் போருக்காகத் தன்னையே ஆயத்தப் படுத்திக் கொண்டது.

இப்படிப் பட்ட சூழ்நிலையில் யார் தான் உலக அமைதிக்கான பாதையை அமைத்துக் கொடுப்பது? சிறந்த வியாபாரியான அமெரிக்க அதிபர் **Donald Trump** களத்தில் இறங்க முடிவெடுத்தார். அவர் வியாபாரியாக இருந்த போது அவர் எழுதிய **The Art of The Deal** (விலை பேசும் கலை) என்ற புத்தகத்தில் அவர் கூறுகின்றார்:
“*உங்களுக்குத் தேவையானதை பிறரிடம் கேட்பதனால் நீங்கள் எதனையும் இழக்கப் போவதில்லை*” (**You lose nothing by asking**). இதனால் பிறருக்கு எரிச்சல் வந்தால், “*நாங்கள் கூட்டாளிகள் ஆக வேண்டாமா? வாருங்கள் பேச்சு வார்த்தைக்கு*” என்று அழையுங்கள் (**Let us discuss as friends**).

உலகில் பெரிய ஒரு வல்லரசான பண பலமும் ஆயுதப் பலமும் நிறைந்த அமெரிக்கா மிகச் சிறிய நாடான வட கொரியாவுடன் கை நீட்டி சமாதானத்திற்கான வழியை உண்டாக்கி இருப்பதை நாங்கள் பாராட்டியே ஆக வேண்டும். இதனால் தான் உலகெங்குமிருந்து நான்காயிரம் (4000 **journalists**) நிருபர்கள் சிங்கப்பூரில் வந்து குவிந்து இந்த ஒப்பந்த நிகழ்ச்சியை பூமியெங்கும் பிரசித்தி படுத்தினர். பில்லியன் கணக்கில் டொலர்களை அள்ளிக் கொட்டி வட கொரியாவின் பொருளாதார வளர்ச்சிக்குத் தாங்கள் துணை நிற்கப் போவதாக அமெரிக்கா ஒப்பந்தம் செய்துள்ளது.

வட கொரியாவைத் தொடர்ந்து, மத்திய கிழக்கு நாடுகளிலும் (**Middle East Countries**), ஆப்பிரிக்க நாடுகளிலும் உள்ள சனங்களைப் பற்றியும் அமெரிக்கா சற்றே கவனம் செலுத்தினால் எவ்வளவு உலக அமைதிக்கு வழி பிறக்கும் என்று எல்லோரும் பேசிக் கொள்கின்றனர்.

“*விண்ணிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக, பூவுலகில் நன் மனத்தோற்கு அமைதியும் ஆகுக*” என்று பண்ணிசைத்த வானகத் தூதர்கள் எமக்குத் துணை நிற்பார்களாக. இறைவன் நல் மனம் கொண்ட அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவில் அன்புடன்,